Publication: Tamil Murasu

Date: 21 Feb 2022

Headline:The Singapore Budget 2022 from young people's perspective






# இளையர் பார்வையில் வரவுசெலவுத் திட்டம் 2022

*இவ்வாண்டுக்கான சிங்கப்பூரின் வரவுசெலவுத் திட்டத்தை (பட்ஜெட்) நிதி அமைச்சர் லாரன்ஸ் வோங் வெள்ளிக்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். 'ஒன்றுசேர்ந்து முன்னேற்றத்திற்கான புதிய பாதையை அமைப்போம்' என்ற தலைப்பில் சிங்கப்பூரர்களில் வெவ்வேறு பிரிவினருக்கு ஏற்ற ஒரு வரவுசெலவுத் திட்டத்தை அவர் முன்வைத்துள்ளார். இது குறித்து, இளையர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்தது இவ்வார இளையர் முரசு.*

## பிள்ளைகள் உள்ள குடும்பங்களுக்கு ஆதரவு



மின்னிலக்கத்திற்குக் கல்வித் திட்டங்கள் மாறியுள்ள நிலையில் எனக்கும் என் தம்பிக்கும் அளிக்கப்படும் 'எடுசேவ்' நிதி, குடும்பத்தின் நிதிச் சுமையைக் குறைக்கக்கூடும். கொவிட்-19 சூழலில் அதிகரித்துள்ள வீட்டுச் செலவுகளைக் கருதி நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களும் எங்களுக்குத் துணைபுரியும். ஆனால், வர்த்தகங்கள் தங்களின் பொருள்களின், சேவைகளின் விலைகளை உயர்த்தும் என்ற கவலையும் எழுந்துள்ளது.

*- சிட்டிபாபு அஸ்வின், 18, தேசிய தொடக்கக்கல்லூரி இறுதியாண்டு மாணவர்*

## சமூகத்தில் பொருளாதார இடைவெளி குறையக்கூடும்



சொத்து, செல்வ வரிகளை உயர்த்துவதால் நிதி ஆதாரத்தை அதிகப்படுத்தி குறைந்த வருமான குடும்பங்களுக்கு உதவ முடியும். இவ்வாறு அதிக வருமானம் ஈட்டுவோரின் செல்வத்தைக் குறைந்த வருமானப் பிரிவினருக்கு உதவும் வகையில் செலவிடுவதால் சமூகத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார இடைவெளியை நம்மால் குறைக்க முடியும் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால், எதிர்காலத்தில் அதிக வருமானம் ஈட்டுவதற்காக உழைக்கும் என்னைப் போன்ற இளையர்களை இந்த வரிச் செலவுகள் மனந்தளர வைக்கலாம். இருப்பினும், பொருளாதார இடைவெளி குறைவது ஒரு தேசமாகவும் சமூகமாகவும் நம்மை உயர்த்தும் என்பதே என் நம்பிக்கை.

*- தெ. பிரபு, 23, சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகம் கணக்காய்வுத் துறையில் இரண்டாம் ஆண்டு மாணவர்*

## படிப்படியாக 'ஜிஎஸ்டி' உயர்த்தப்படுவதில் ஆறுதல்



பொருள், சேவை வரி படிப்படியாக உயர்த்தப்படுவது ஆறுதல் அளிக்கிறது. நான் என் முதல் வேலையை விரைவில் தொடங்கவிருக்கிறேன். எனது ஆரம்பச் சம்பளத்தைக் கொண்டு 9 விழுக்காடாக உயரும் பொருள், சேவை வரியைச் சமாளிக்க முடியாது என்று வருந்தினேன். ஆனால், படிப்படியாக வரி உயர்த்தப்படுவதால் நான் நன்கு திட்டமிட்டு, எனது வருமானத்தை உயர்த்துவதற்கான வழிகளைத் தேடிக்கொள்ள முடியும்.

*- அஞ்சலி ஈஸ்வரன், 23, நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக வணிகத்துறை பட்டதாரி*

## குழந்தை வளர்ப்பு தொடர்பில் கூடுதல் உதவி தேவை



சிங்கப்பூரில் குழந்தை போனஸ் அவசியம் என்பது என்னுடைய கருத்து. இரண்டாவது குழந்தை பெற்றுக்கொள்ள நான் திட்டமிடுகிறேன். தம்பதிகளுக்கு உதவியாக மேலும் சில திட்டங்களை அரசாங்கம் கொண்டுவந்தால் சிறப்பாக இருக்கும். 'சிடிசி' பற்றுச்சீட்டால் குடும்பத்தின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாது. குழந்தைகளுக்கான கூடுதல் 'மெடிசேவ்', 'எடுசேவ்' பங்களிப்புகள், பெற்றோருக்கு உதவியாக இருக்கும்.

*- அய்ஷா சித்திகா, 25, வளமூட்டு ஆசிரியர்*


## நடுத்தரவாசிகளுக்கு இக்கட்டான நிலை



மக்கள் எத்தகைய குடியிருப்பில் வசிக்கிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு 'யு-சேவ்' வழங்குவது நியாயமற்றது என்பது என் கருத்து. ஒருவரின் தனிப்பட்ட நிதி நிலையைப் பொறுத்து அரசாங்கம் தள்ளுபடி அளித்தால் மிகவும் உதவியாக இருக்கும். வருமானத்தில் மாற்றமின்றிச் செலவுகள் அதிகரிக்கும் நிலையில் பிற்கால நடுத்தர வருமானக் குடும்பங்களின் நிலையை எண்ணி அஞ்சுகிறேன்.

*- மு. குமரேசன், 26, வான்வெளிப் பொறியாளர்*

## மக்களிடையே இனி விழிப்புணர்வு அதிகரிக்கும்



சிங்கப்பூரின் கரிம வரி அதிகரிப்பு ஆறுதல் அளிக்கிறது. தொழில்கள், நிறுவனங்களிடத்தில் பசுமைப் பாதுகாப்பை முன்பில்லாத அளவுக்குக் கடுமையாக வலியுறுத்துவது சிங்கப்பூருக்கு நன்மை பயக்கும். சராசரி மக்களான பயனீட்டாளர்களையும் கரிம வரி பாதிப்பதால் இது மின்சாரப் பயன்பாடு குறித்த மெத்தனப்போக்கை நீக்கி மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

*- மணிகண்டன் ஸ்ரீலதா, 19, தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக் கல்லூரி மாணவர்*

## மோசமடையும் கொவிட்-19 சூழலில் ஆறுதல்



கொவிட்-19 நோய்த்தொற்று நடுத்தரக் குடும்பங்களுக்கு மருத்துவச் செலவு குறித்த கவலையையும் அச்சத்தையும் தருகிறது. தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களுக்கு இதுவரை இலவச சிகிச்சை கிடைக்கும் நிலையும் மாறக்கூடுமோ என்று எண்ணினோம். ஆகவே, அரசாங்கத்தின் நீண்டகால நிதியுதவித் திட்டங்கள் நிச்சயம் மக்களுக்குப் பயனளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

*- தனுஸ்ரீ வெங்கடேஷ், 17, நீ ஆன் பலதுறைத் தொழிற்கல்லூரி இரண்டாம் ஆண்டு மாணவர்*

## அச்சுறுத்தும் பொருள், சேவை வரியும் விலைவாசியும்



பெரும்பாலான இளம் சிங்கப்பூரர்களுக்குச் சொந்த வீடு வாங்குவது ஒரு கனவு, நான் உட்பட. அதனால் 2025க்குள் வெவ்வேறு வரிகள் அதிகரிக்கவிருப்பது பதற்றத்தைத் தருகிறது. இரண்டு விழுக்காடு உயர்வு காணும் பொருள், சேவை வரியும் அதிகரிக்கும் விலைவாசியும் இளையர்களை அச்சுறுத்தலாம். இச்செலவுகளைச் சமாளிக்கும் திறனை அதற்குள் பெறுவோமா என்பது சந்தேகமே.

*- ப. அ. இரகுநந்தன், 18, ஆண்டர்சன் சிராங்கூன் தொடக்கக் கல்லூரி முதலாமாண்டு மாணவர்*

## செலவுகள் அதிகரிப்பதால் எதிர்காலத்தைப் பற்றிய கவலை



பொருள், சேவை வரியை உயர்த்துவதற்கு முன்பு நம் அரசாங்கம் உதவி அளிப்பது ஆறுதலாக இருக்கிறது. குடும்பங்களுக்கு உதவுவதற்காக வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் சில குடும்பங்களுக்கு உதவியாக இருக்கும். எனினும், ஒரு பக்கம் சலுகைகள் அளிக்கப்பட்டாலும் மறுபக்கம் பயனீட்டுக் கட்டணங்கள், பொருள் சேவை வரி, சொத்து வரி போன்ற செலவுகள் அதிகரிக்கின்றன. இது எதிர்காலத்தைப் பற்றிய பதற்றத்தை எனக்குள் ஏற்படுத்தியுள்ளது.

*- ச. விக்ரம், 27, கணக்கியல், நிதியியல் துறைப் பட்டதாரி*

## பசுமைத் துறைக்குக் கூடுதல் ஆதரவில் மகிழ்ச்சி



நாம் 7 விழுக்காடு பொருள், சேவை வரியுடன் வாழ்ந்திருக்கிறோம். பொருள், சேவை வரி உயர்த்தப்பட்டாலும் சம்பளத்திலும் வரவிலும் மாற்றம் இல்லை. விலைவாசி ஏறும்போது வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கிறது. இரண்டிற்கும் சமநிலை அவசியம். ஒரு கட்டடத்தை வடிவமைக்கும்போது நீடித்த நிலைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நம்புபவன் நான். எனவே, சுற்றுச்சூழலைக் கருதி வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளது பாராட்டிற்குரியது.

*- நவின்குமார் பழனி, 23, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகக் கட்டடக்கலைத் துறை மாணவர்*

## பசுமைத் திட்டங்களுக்குக் கூடுதல் ஆதரவு



பசுமைத் திட்டங்களுக்குக் கூடுதல் ஆதரவு வழங்கப்பட உள்ளது வரவேற்கத்தக்கது. என்னைப் போன்ற மாணவர்களுக்கு இத்துறை சார்ந்த புதிய வேலைவாய்ப்புகளை இது ஏற்படுத்தித் தரும். கரிம வரி அதிகரிப்பு பன்மடங்காகும் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. பயனீட்டுச் செலவுகள் இதனால் அதிகரிக்கும். இருப்பினும், சிங்கப்பூர் பசுமைப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதற்கு இது ஓர் அறிகுறி.

*- ஹரேஷ் பாண்டியன், 25, சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகம் மின் ஆற்றல் பொறியியல் துறை இறுதியாண்டு மாணவர்*

**செய்தித் திரட்டு:**
**ஆ.விஷ்ணு வர்தினி, கவின்விழி கதிரொளி**

**படங்கள்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், கருத்துக் கூறியோர்.**



Source: Tamil Murasu © SPH Media Limited.Reproduced with permission.